

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் கிழக்கு ஒன்றியம் போத்திரமங்கலம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் துவக்கி வைத்து அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் சி.பி. ஆதித்யா பாலசுப்ரமணியன் மங்களூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பட்டூர் வீர.அமிர்த லிங்கம் உள்ளனர்.

### கல்விக்கு நிதி ஒதுக்க மறுப்பது

# மாநில சுயாட்சி, தேச ஒற்றுமை மற்றும் மொழி உரிமை மீது தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல்!

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கண்டனம்!



புதுடெல்லி, மார்ச் 13 -

மாநிலங்களவையில் கல்வி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது:

இந்தியா சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தற்போது வரை மௌலானா அபுல் கலாம் ஆசாத், எம்.சி. சாக்ளா, வி.கே.ஆர்.வி. ராவ் போன்ற பெருமகன்கள் உள்ளிட்ட 30 பேர் ஒன்றிய கல்வி அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால், மோடி தலைமையிலான பி.ஜே.பி. அரசு மத்தியில் அமைந்ததிலிருந்துதான் பெரும் போராட்டங்கள், பிரச்சினைகள், அர்த்தமற்ற கொள்கை முடிவுகள் போன்றவற்றால் நாட்டின் கல்வித்துறை பாதிக்கப்பட்டிருக்கிறது.

மோடியின் தலைமையிலான அரசுகளில்தான் கல்வி தொடர்பான விஷயங்களில் மாநில சுயாட்சியை, மாநிலத்திற்கென உள்ள அதிகாரத்தைப் பறிப்பது, அனைவரையும் உள்ளடக்கிய கொள்கைகளை மாற்றி, கூட்டாட்சித் தத்துவத்துக்கென உருவாக்கப்பட்ட அடிப்படைக் கொள்கைகளைத் தகர்ப்பது போன்ற காரியங்கள் இப்போது நடந்தேறி வருகின்றன.

2014 -16 ல் ஸ்மிரிதி இராணி கல்வி அமைச்சராக இருந்தபோது பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டன; 2016 - 19 ல் பிரகாஷ் ஜவடேகர் அமைச்சராக இருந்தபோது நீட் தேர்வை அமல்படுத்தி மாநில சுயாட்சி பாதிக்கப்பட்டது. 2019-21 ல் ரமேஷ் பொக்ரியால் அமைச்சராக இருந்தபோது கொரோனா காலத்தில் நீட் மற்றும் ஜேஇஇ தேர்வுகள் சர்ச்சை பெருமளவு வெடித்தது. 2021 ல் இருந்து தற்போது வரை அமைச்சராக உள்ள தர்மேந்திரப் பிரதான் காலத்தில்தான் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்த முனைந்து, மாநில சுயாட்சியின் மீது தாக்குதல் நடக்கிறது. கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் எம்.பி.க்களுக்கான கோட்டாவை ஒழித்தவரும் இவர்தான்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் கல்வி பரவலாக்கப்பட்டது. காலனி அமைப்பு முறையில் கல்வி பெறும் வசதி ஓரிடத்தில் குவிக்க ப்பட்டு, லட்சக் கணக்கான ஏழைகளுக்கு அதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவில் இந்த ஏற்றத் தாழ்வுகளை ஒழித்து அனைவருக்கும் கல்வியை வழங்க வேண்டிய அவசியம் எழுந்தது.

**கல்வி முக்கிய பங்கு!**

ஒரு தேசத்தைக் கட்டமைப்பதில் கல்வி முக்கியமான ஓர் ஆயுதம் என்பதை உணர்ந்து கல்வியை பொதுப்பட்டியலில் சேர்த்தார்கள் நமது அரசியல் சட்ட வகுப்பாளர்கள். கல்வி வழங்குவது தொடர்பான பொறுப்பு மத்திய, மாநில அரசுகளுக்கு சமமாக உள்ளதை உனர்ந்துதான் அந்த ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நாள் முதலாக கல்வி தொடர்பான சீர்திருத்தத்திலும் சாதனைகளிலும் தமிழ்நாடு மற்ற எல்லா மாநிலங்களுக்கும் முன் மாதிரியாக விளங்கி வருகிறது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் சிந்திக்கும் முன்பாக 1947 லேயே கட்டாயக் கல்வியை சட்டமாக்கியது தமிழ்நாடுதான். 1960 ல் தமிழகப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டு அதன் பிறகு இன்று வரை இந்தியாவின் பிற மாநிலங்களில் அதைப் பின்பற்றி அமல்படுத்த வேண்டிய நிலை தொடர்கிறது. இதன் மூலம் பள்ளிகளில் மாணவர்கள் சேர்வது அதிகமானது மட்டுமின்றி மாணவர்கள் ஏழ்மையால் இடை நிற்றலும் கணிசமாகக் குறைந்தது. இதன் காரணமாக இந்தியாவில் கல்வியறிவு பெற்றோர் அதிகமாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு எப்போதும் உயர்ந்து நிற்கிறது.

1960 முதல் இருமொழிக் கொள்கையை அமல்படுத்திவரும் தமிழ்நாடுதான் பள்ளி கல்லூரிகளில் மாணவர்கள் சேரும் விகிதத்தை அதிக அளவில் இன்றுவரை தக்க வைத்திருக்கிறது.

**தமிழ் நாட்டில் கல்வி அறிவு பெற்றோர் அதிகம்!**

2011 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் கல்வியறிவு பெற்றோர் 80.3 சதவிகிதம். இது தேசிய சராசரியை விட அதிகம். இந்தியாவில் பொறியியல் படிப்பின் மையமாக விளங்குவதும்; உயர்கல்வியில் தேசிய சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகம் வைத்திருப்பதும் தமிழ்நாடுதான்.

அதுமட்டுமல்ல... விலையில்லா சீருடை, சைக்கிள், லேப்டாப் என வழங்கி கல்வி கற்பதில் ஏற்றத் தாழ்வுகள் இல்லாத நிலையை உருவாக்கிய மாநிலமும் தமிழ்நாடுதான்.

காலை உணவுத் திட்டத்தை அமல்படுத்தி, இருமொழிக் கொள்கையை உறுதிபடத் தொடர்ந்து அமல்படுத்தியதால்தான் பள்ளிக்கல்வித் தரம், உயர் கல்வியில் மாணவர்கள் சேரும் விகிதம் ஆகியவற்றில் தமிழ்நாடு உயர்ந்து நின்று மற்ற மாநிலங்களுக்குமுன்னுதாரணமாகத் திகழ்கிறது.

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மாணவர்களும் தரமான கல்வியைப் பெற வழிவகுக்கும் கல்வி உரிமைச் சட்டத்தை அமல்படுத்திய முதல் மாநிலம் தமிழகம்தான். இப்படி சமூகத்தை மேம்படுத்தும் கொள்கைகளை தயக்கமே இல்லாமல் துணிச்சலாக அமல்படுத்த தமிழ்நாடு தவறியதே இல்லை.

அப்படித்தான் மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டத்தையும் வெற்றிகரமாக அமல்படுத்தியது தமிழ்நாடு அரசு. இந்த விஷயத்தில் ஒன்றிய அரசு நிர்ணயித்த அத்தனை இலக்குகளையும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு முன்பாகவே நிறைவேற்றி சாதித்தது தமிழ்நாடு அரசு. இதற்காகவே தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தமிழ்நாட்டை வஞ்சிக்கத் துடிக்கிறார்கள்.

சமூக நீதிக்கு எதிரானது, கொள்கைத் தெளிவற்றது, கூட்டாட்சித் தத்துவத்தை சிதைக்கிறது, மாநில சுயாட்சியை பறிக்கிறது என்பதால்தான் நீட் தேர்வு மற்றும் புதிய கல்விக் கொள்கைகளை தமிழ்நாடு எதிர்க்கிறது. ஆனால், இந்த பி.ஜே.பி. அரசு, தவறான தெளிவற்ற, சமூக நீதிக்கு எதிரான கொள்கைகளை ஏற்கச் சொல்லி தமிழ்நாட்டை நிர்பந்திக்கிறது.

சமூகநீதியை நிலைநாட்டி, கல்வியில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டின் மீது இத்தகைய நிர்பந்தத்தைச் செய்வதற்காக இந்த கல்வி அமைச்சரும் இந்த அரசும் வருத்தப்பட வேண்டும். இந்த தவறான கொள்கைகளை ஏற்கவில்லை என்பதற்காக, வகுப்பறைகளை மேம்படுத்துவது, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது, கல்விபெறும் வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பணிகளுக்காக ஒன்றிய அரசு தமிழகத்திற்குத் தர வேண்டிய நிதியைத் தராமல், அதை வேறு மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளித்திருப்பது இந்த கல்வி அமைச்சரின் பழி வாங்கும் போக்கையும் இந்த அரசின் சகிப்புத் தன்மையற்ற போக்கையும் தான் காட்டுகின்றன. இவர்களது இந்த நடவடிக்கையால், மாநிலத்தில் கல்வி வளர்ச்சி தடைபடும் என்பது பற்றியோ, கிராமப் பகுதிகளில் கல்வி பெறும் வாய்ப்புகள் பாதிக்கப்படும் என்பது பற்றியோ இந்த ஒன்றிய அரசுக்கு கவலையில்லை.

இந்த நேரத்தில் நான் சிலவற்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். புதியன் கல்விக்கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்வதாக ஒருபோதும் சொன்னதில்லை. இதற்கென ஒரு குழுவை நியமித்து ஆராய்ந்து அதனடிப்படையில் முடிவெடுப்பதாகச் சொல்லியிருந்தோம். ஆய்வின் முடிவில் இந்த ஒன்றிய அரசு இப்போது கொண்டுவரத் துடிக்கும் பிஎம் ்ரீ பள்ளி என்பது கடந்த காலத்தில் மும்மொழிக் கொள்கையை திணிக்க முனைந்த நவோதயா பள்ளிகளைப் போன்றதே என்பது தெரிய வந்ததால், புதிய கல்விக்கொள்கையை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று எங்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆகஸ்ட் 2024 லேயே ஒன்றிய அரசுக்கு கடிதம் மூலமாகச் சொல்லிவிட்டார். உண்மை இவ்வாறு இருக்க, முதலில் ஒப்புக்கொண்டோம்... இப்போது மறுக்கிறோம் என்ற பேச்சுக்கு இடமே இல்லையே..?

புதிய கல்விக்கொள்கையில் நீங்கள் எதையெல்லாம் சொல்லியிருக்கிறீர்களோ அதில் பலவற்றை பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அமல்படுத்தி வருகிறது தமிழ்நாடு அரசு. ஆனால், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு எதிரான மும்மொழிக் கொள்கையை மறைமுகமாகத் திணிக்க வலியுறுத்தும் பிஎம் ்ரீ பள்ளிகளை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று சொன்னதற்காக சமக்ரா சிக்ஷா திட்டத்திற்காக ஒதுக்க வேண்டிய சுமார் 2000 கோடி ரூபாய் நிதியைத் தராமல் நிறுத்தி வைப்பது எந்த வகையில் நியாயம்? கல்வியை பொதுப்பட்டியலில் சேர்த்து, அரசமைப்புச் சட்டத்தால் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாநில சுயாட்சி உரிமையைப் பறிப்பதுபோல இது உள்ளது. மாநிலத்தில் ஏற்கனவே உள்ள சில கல்வித் திட்டங்களை புதிய கல்விக் கொள்கையின் நீட்சியாகக் காட்ட ஒன்றிய அரசு முனைவதும் தவறானதும் உண்மைக்கு மாறானதுமாகும்.

**கல்விக்கு வழங்க வேண்டிய நிதி!**

கல்விக்கு வழங்க வேண்டிய நிதியை உரிய நேரத்தில் தராமல் இழுத்தடிப்பது நிர்வாகப் பிரச்சினை மட்டுமல்ல... அரசமைப்புச் சட்டம் மற்றும் கூட்டாட்சித் தத்துவம் சம்பந்தப்பட்ட மிக முக்கிய பிரச்சினையாகும். அரசியல் சட்டத்தின் பிரிவு 21 ஏ, 6 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் கல்வி பெறுவது அடிப்படை உரிமை என்று சொல்லி உறுதி செய்கிறது. இந்த விஷயத்தில் மாநிலங்களுக்கு உள்ள அதிகாரத்தையும் அரசமைப்புச் சட்டம் மிகத் தெளிவாக வலியுறுத்துகிறது.

இந்தப் பின்னணியில் நியாயமாக வழங்க வேண்டிய கல்வி நிதியைத் தராமல் தாமதிப்பதும் மறுப்பதும் மாநில சுயாட்சி மீதும், தேச ஒற்றுமை மற்றும் மொழி உரிமை மீதும் தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல் ஆகும். இந்திய ஒன்றியத்தில் ஓர் அங்கமான தமிழ்நாடு, சட்டப்படி தனக்கு உரிய நியாயமான நிதிப் பகிர்வைப் பெற எல்லா உரிமைகளும் உண்டு. இந்த நிதியை தராமல் இருப்பது தமிழகத்தில் கல்வி வளர்ச்சியைத் தடைப்படுத்துவது மட்டுமின்றி, கூட்டாட்சித் தத்துவத்தை சிதைத்து, மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான இணக்கமான உறவைச் சிதைப்பதுமாகும்.

1930 முதல் இந்தி திணிப்பை எதிர்த்து வரும் தமிழகம், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த 1968 முதல் வெற்றிகரமாக இருமொழிக் கொள்கையை அமல்படுத்தி வருகிறது. வளர்ந்த நாடுகளுக்கு இணையாகவும் அதைவிட ஒருபடி மேலாகவும் கல்வியில் பல சாதனைகளை தமிழ்நாடு படைத்து வருவது இந்த இருமொழிக் கொள்கையால்தான். தமிழகம் செய்த இந்த சாதனையை இந்தியாவின் பிற மாநிலங்கள் செய்வதற்கு இன்னும் பல பத்தாண்டுகள் ஆகும். மூன்றாவது மொழி எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம் என்று புதிய கல்விக் கொள்கை சொன்னாலும், அது இந்தியைத் திணிப்பதற்கான ஒன்றிய அரசின் முயற்சி என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். மும்மொழிக் கொள்கை என்பது ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மாணவர்களை பெரிதும் பாதிக்கும் என்பதே உண்மை.

இவ்வளவு உண்மைகள் தெரிந்திருந்தும், புதிய கல்விக்கொள்கையை ஏற்காவிட்டால் நிதி தரமுடியாது என்று அமைச்சர் தர்மேந்திர பிரதான் சொல்வது நியாயமற்றது மட்டுமல்ல, அரசமைப்புச் சட்டத்திற்கு விரோதமானதும்கூட.

இந்தி கற்பதை தமிழ்நாடு அரசு எதிர்க்கவில்லை; அதைத் திணிப்பதைத்தான் எதிர்கிறது. அதனால்தான், இப்படி நியாயமற்ற கொள்கையை ஏற்றால்தான் நிதி வரும் என்றால் அது எத்தனை ஆயிரம் கோடி என்றாலும் தேவையில்லை; இந்தி திணிப்பை தொடர்ந்து எதிர்ப்போம் என்று சொல்லியிருக்கிறார் எங்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள். தமிழகத்தில் பி.ஜே.பி.யைத் தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் இந்தக் கருத்தில் உடன்படுகிறார்கள்.

தமிழ்நாட்டு மக்களின் இந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு, இந்தி மற்றும் சமஸ்கிருதத்தை திணிப்பதைக் கைவிட்டு, தமிழகத்திற்குத் தர வேண்டிய நிதியை ஒன்றிய அரசு உடனடியாகத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் தமிழகத்தில் கல்வி வளர்ச்சிப் பணிகள் தடைபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமையும் ஒன்றிய அரசுக்கு உள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதன் மூலம், மாநில அரசுகள் கூட்டாட்சித் தத்துவத்தின்படி பெற வேண்டிய நிதிகளைப் பெறுவதையும், இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் உள்ள கல்வி பெறும் உரிமை நிலைநாட்டப்படுவதையும் ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.


# மக்களாட்சி தான்! ஆனால்… இந்தியாவை ஓர் இட்லர் ஆள்கிறார்!

"தமிழர்கள் நாகரிகம் அற்றவர்கள்" என்ற தனது பேச்சுக்குக் கண்டனம் வலுத்த நிலையில், ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் "தனது பேச்சானது யார் மனதையாவது புண்படுத்தியிருந்தால், நூறு முறை கூட மன்னிப்பு கேட்கத் தயார்" என்று அந்தர் பல்டி அடித்துக் கூறியுள்ளார்.

கடந்த மார்ச் 10 திங்கள் கிழமை காலை ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கைத் தொடரின் இரண்டாம் கூட்ட அமர்வில், தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன் பி.எம். சிறீ திட்டத்தில் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட 2,152 கோடி ரூபாய் வழங்கப்படாமல் இருப்பதைக் கண்டித்துக் கேள்வி எழுப்பியிருந்தார். பதிலளித்த ஒன்றியக் கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், "முதல்வர் ஸ்டாலின் பி.எம். சிறீ திட்டத்தில் இணைய ஆரம்பத்தில் ஒப்புக் கொண்டார்; ஆனால், திடீரென ஒரு சூப்பர் முதல்வரின் பேச்சைக் கேட்டுக் கடைசி நேரத்தில் தமிழ்நாடு முதல்வர் இதில் கையெழுத்திடாமல் பின்வாங்கி விட்டார்; சூப்பர் முதல்வர் அரசியல் செய்கிறார்கள்;

தமிழ்நாட்டு மாணவர்களுக்கு அநீதி இழைக்கிறார்கள்; மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழாக்குகிறார்கள்; மக்களைத் தவறாக வழி நடத்துகிறார்கள்; அவர்கள் நேர்மையற்றவர்கள்; நல்ல நாகரிகத்தைக் கொண்டிருக்கவில்லை; ஜனநாயகத்திற்கு விரோதமானவர்கள்; மொழியை வைத்து அவர்கள் அரசியல் செய்து விளையாடுகிறார்கள்!" என்றெல்லாம் அவை நாகரிக மின்றி ஒட்டு மொத்தத் தமிழர்களையும் இழிவுபடுத்தும் வகையில், சர்ச்சைக்குரிய வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசினார். இதற்குத் தி.மு.க. எம்பிக்கள் கடும் எதிர்ப்பையும், கண்டனத்தையும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்குத் தெரிவித்திருந்தார்கள்.

இதனைக் கேள்வியுற்ற தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின், "தன்னை மன்னரென எண்ணிக் கொண்டு, ஆணவத்துடன் பேசும் ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு நாவடக்கம் வேண்டும்; தமிழ்நாட்டின் நிதியைத் தராமல் ஏமாற்றும் நீங்கள் தமிழ்நாட்டு எம்.பி.க்களைப் பார்த்து அநாகரிகமானவர்கள் என்பதா? தமிழ்நாட்டு மக்களை அவமானப்படுத்துகிறீர்கள்? பிரதமர் நரேந்திர மோடி இதனை ஏற்கிறாரா?" என்று அண்ணா வழியில் வினா எழுப்பியிருந்தார்.



**கவிஞர் தமிழ்தாசன்**
*கழக தீர்மானக் குழுத் தலைவர்*

அத்துடன் "தமிழக அரசையும், தமிழக எம்.பி.க்களையும், தமிழர்களையும் இழிவுபடுத்தும் வார்த்தையை நான் பயன்படுத்தியதாக எனது சகோதரியும் மூத்த உறுப்பினரான கனிமொழி கூறியிருக்கிறார் எனவே எனது அந்த வார்த்தையை நான் வாபஸ் பெறுகிறேன் அதை அவை குறிப்பில் இருந்து சேர்க்க வேண்டாம் என கேட்டுக் கொண்டுள்ளார். அவை குறிப்பில் இருந்து அவர் கேட்டுக் கொண்டிருக்கிறாங்க மறு வார்த்தை அவை குறிப்பிலிருந்து நீக்கப்ப ட்டுள்ளது என்று அவை தலைவர் ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

"ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டை அவமதிக்கும் போக்கை ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர்கள் பின்பற்று கிறார்கள். நேற்று தர்மேந்திர பிரதான் தமிழ்நாட்டினை அவமதித்தார். இன்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தமிழ்நாட்டையும், எங்கள் முதலமைச்சரையும் அவமதித்துப் பேசி உள்ளார். அவர்களின் பேச்சு கண்டிக்கத்தக்கது. அவரின் கருத்துக்குப் பதில் அளித்திட எங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை" என்று கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கண்டனம் தெரிவித்து பேசியுள்ளார்.

தமிழ்நாட்டு எம்.பி.க்களை அவமதித்த அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கடுமையாகக் கண்டித்து மாநிலம் முழுவதும் அவரது உருவப் பொம்மைகள் எரித்துப் போராட்டம் நடத்தினர். அது மட்டுமல்லாமல், நாடாளுமன்ற இரு அவைகளிலும் கழக உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பைப் தெரிவித்துள்ளனர். நாடாளுமன்றத்தின் வெளியிலும் கருப்பு உடை அணிந்து தங்களது எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.

இதற்கிடையில் தி.மு.க. எம்.பி.க்களின் கடுமையான எதிர்ப்பால் பணிந்த ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், "தமிழ்நாடு அரசையும், தமிழக எம்பிக்களையும், தமிழர்களையும் இழிவுபடுத்தும் அந்த வார்த்தைகளை நான் பயன்படுத்தியதாக எனது சகோதரியும், மூத்த எம்.பியுமான கனிமொழி கூறியிருக்கிறார். எனவே, நான் கூறிய அந்த வார்த்தைகளைத் திரும்பப் பெறுகிறேன்; அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பில் சேர்க்க வேண்டாமெனவும் கேட்டுக்கொள்கிறேன். "இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து, "அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்" என்றும் சபா நாயகர் ஓம் பிர்லா அறிவித்துள்ளார்.

ஆனால், "பி.எம் சிறீ திட்டத்தையும் ஏற்பதாக ஒப்புக் கொண்டால் மட்டுமே, தமிழகத்திற்கு, சமக்ரா சிக்ஷா அபிமான், திட்டத்தின் கீழான ரூபாய் 2152 கோடி நிதியை வழங்குவோம் என அந்த நிலைப்பாட்டில் இருந்து பின் வாங்காமல் நிதியை மறுத்தது மட்டுமின்றி ஆணவமாகப் பேசியுள்ளார் அமைச்சர் தர்மேந்திர பிரதான். இது கல்வி உரிமை, மாநில உரிமை மீறும் அரசியல் சட்டத்திற்கு எதிரான செயலாகும் என்பதைக் குறிப்பிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் எழுப்பி வருகிறார்கள்.

தமிழர்களை இழிவுபடுத்தும் நோக்கில் தொடர்ந்து பா.ஜ.க. ஒன்றிய அமைச்சர்கள் பேசி வருவது என்பது மிகவும் கண்டனத்துக்குரியதாகும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, 2024 ஆம் ஆண்டு மார்ச் 19 அன்று கர்நாடக பா.ஜ.க.வைச் சேர்ந்த பெண் ஒன்றிய இணை அமைச்சர் ஷோபா கரந்த்லஜே என்பவர் பெங்களூருவில் தமிழர்கள் மீது தவறான குற்றச் சாற்றைச் சுமத்திப் பேசியிருந்தார். சிறுபான்மையினர் தொழுகை முடிந்த பின்னர்தான் வாகனங்கள் செல்ல முடியும் என்ற நிலையில், அதனைக் கண்டித்து, "முஸ்லிம்கள் தொழுகை முடிந்த பின்னர் தான் செல்ல முடியுமா? முதல்வர் சித்தராமையாவைக் கேட்கிறேன்; இந்துக்கள் உங்களுக்கு வாக்களிக்க வில்லையா? " என்று இந்துக்களைத் திருப்திப்படுத்த பேசியதோடுநின்றுவிடாமல், "தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வருகிறார்கள். பயிற்சி பெற்று இங்கு வெடிகுண்டுகள் வைக்கின்றனர்; அப்படித்தான் இராமேஸ்வரம் கஃபே வில் வெடிகுண்டு வைக்கப்பட்டது. டெல்லியிலிருந்து மற்றொருவர் வந்து சட்டமன்றத்தில் பாகிஸ்தான் ஆதரவுக் கோஷம் எழுப்புகிறார்; கேரளாவில் இருந்து வந்து இன்னொருவர் கல்லூரி மாணவர்கள் மீது ஆசிட் வீசுகின்றார்!" என்று வாய் அடக்கமின்றி, ஆணவத்தோடு இந்துக்களைத் திருப்திபடுத்த மதவாதக் கருத்துக்களை எடுத்துப் பேசிக்குற்றச் சாற்றுக்களை அள்ளி வீசி இருந்தார் அந்தப் பெண் அமைச்சர்.

உடனே, தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்கள், தமிழ் அமைப்புகள் கடும் கண்டனத்தை அந்த அம்மையாருக்குத் தெரிவித்திருந்தனர். மேலும் அவர் மீது தமிழகத்தில் வழக்கும் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அந்த அம்மையார் மன்னிப்பும் கூறி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு போட்டு இருந்தார்.

அது மட்டும் அல்ல; நாடாளுமன்றத் தேர்தலின் போது, 2024 மே 21 அன்று ஒடிசாவில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார் பிரதமர் நரேந்திரமோடி.அவர் புவனேஸ்வர், ரங்குல் போன்ற இடங்களில் ரோடு ஷோ நடத்தினார். அப்போது "தற்போது சாவி மாயமாக இருந்து வருகிறது. பூரி ஜெகநாதர் கோவில் பொக்கிஷ சாவி காணாமல் போய்விட்டது. நமது வீட்டுச் சாவி காணாமல் போனால், ஜெகநாதரிடம் முறையிடலாம். ஆனால், அறைச் சாவியே காணாமல் போய்விட்டது. அந்தச் சாவி தமிழகத்தைச் சார்ந்த ஒரு முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியிடம் இருப்பதாக மக்கள் கூறுகிறார்கள் என மோடி கடுமையாக விமர்சித்து பேசினார். (Missing Keys of the Jaganath Temple, Rathna Bhandar (Treasure trove) in Odisha,s Puri were sent to Tamil Nadu" P.M.) என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" போன்ற ஆங்கில ஏடுகள் தலைப்பிட்டு வெளியிட்டிருந்தன.

உடனே தமிழ்நாடு முதல்வர் தளபதி ஸ்டாலின் எதிர்வினை ஆற்றுகிற விதத்தில், அதற்குக் கண்டனம் தெரிவித்தார். "மோடி தமிழ்நாட்டுக்கு வரும்போது தமிழ் மொழியை உயர்த்திப் பேசுவது; தமிழர்களைப் போல் அறிவாளிகள் உலகில் இல்லை எனக் கூறுவது; இராஜஸ்தான், ம.பி, உ.பி. ஒடிசா போன்ற மாநிலங்களில் வாக்கு சேகரிக்கும் போது, தமிழ்நாட்டு மக்களைத் திருடர்கள் போலவும், வெறுப்பு மிகுந்த வார்த்தைகளால் அம் மாநிலங்களுக்கு எதிரானவர்கள் போலவும் பேசுவதென இரட்டை வேடம் போடுகிறார். இப்படித் தமிழர்கள் மீது அவதூறு பேசுவதை அவர் நிறுத்திக் கொள்ள வேண்டும். (P.M. Modi,s remarks were an insult to Jaganath " Stalin) இப்படியாக "இந்தியா டுடே" ஏடு பெரிய அளவில் அவரது கண்டன அறிக்கையை எழுதி வெளியிட்டு இருந்தது.

மோடியின் அவதூறான பேச்சிற்குரிய தமிழகத்தைச் சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.கே.பாண்டியன் என்பவர் முதல்வராக இருந்த நவீன் பட்நாயக் நிர்வாகத்தில் தலைமைச் செயலாளராக இருந்து பணிபுரிந்து வந்தார். அவர் தன் பொறுப்பை உதறிவிட்டு நவீன் பட்நாயக்கின் விருப்ப த்திற்கேற்ப பிஜு ஜனதா தளக் கட்சியில் சேர்ந்து பணியாற்றினார். முக்கிய பிரமுகராக இருந்து பணியாற்றி வந்த பி.கே.பாண்டியனுக்கு எதிராகவே பிரதமர் மோடி மறைமுகமாகப் பிரச்சாரத்தில் பொய் மூடைகளைக் கட்டவிழ்த்து விட்டிருந்தார். "பிரதமர் அவர்களே, … உங்களிடம் உயர் அதிகாரிகள் உள்ளனர். திருட்டு போன சாவி யாரிடம் இருக்கிறது? என்று அவர்களால் கண்டுபிடிக்க முடியும்! ஒடிசாவில் தூய்மையான நிர்வாகம் நடத்தி வருகிறார் நவீன் பட்நாயக். உலக மக்களுக்கு இது நன்றாகத் தெரியும்; கடவுளை வைத்து அரசியல் செய்ய வேண்டாம்!" … என்று பி.கே. பாண்டியன் கெந்தரா பாடாவில் மோடிக்குத் தக்கப் பதிலடி தந்து பேசி இருந்தார்.

இப்படித் தொடர்ந்து பா.ஜ.க.வை சேர்ந்த அமைச்சர் பெருமக்கள் முதல், பிரதமர் வரை தமிழர்களுக்கு எதிராகப் பேசி நடமாடி வருகிறார்கள்!

ஒன்றிய மாநில அரசுகளின் ஒத்திசைவுப் பட்டியலில் உள்ள கல்வித்துறை புதிய கல்விக் கொள்கையை மும்மொழியை ஏற்கவும், மறுக்கவும் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு முழு உரிமை உண்டு என்று அரசியல் அமைப்பு சட்டம் வழிவகைச் செய்துள்ளது என்து அடிப்படை கருத்தாகும். இந்நிலையில் வேண்டுமென்றே அச்சுறுத்து நோக்கில் ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசுக்குத் தரவேண்டிய ரூபாய் 2,152 கோடி நிதி தர வெளிப்படையாகவே மறுத்து வருகிறது.

மக்கள் தொகை அடிப்படையில் எம்.பி தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரால் தமிழகத்திற்குள்ள தற்போதைய 39 நாடாளுமன்றத் தொகுதியில் எட்டு தொகுதிகள் குறைய வாய்ப்புள்ளது. அதே நேரத்தில் உத்திரப்பிரதேசம் மத்திய பிரதேசம் உள்ளிட்ட வட மாநிலங்களில் நாடாளுமன்றத் தொகுதிகள் அதிகரிக்கத்து உள்ளன. இதனால் எதிர்கால நிர்வாக நடவடிக்கைகளில், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் பெரும் பாதிப்பைச் சந்திக்க நேரிடும். இதனைச் சுட்டிக்காட்டும் விதத்தில் எச்சரிக்கை செய்து, திமுக கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள் இந்திய அளவில் நரேந்திர மோடி அரசின் எதிர்கால மோசடித் திட்டத்தை அம்பலப்படுத்தியுள்ளார்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் கடைப்பிடித்து வருவதால், மக்கள் தொகை கணக்கெடுப்பால் தொகுதிகள் குறைய வாய்ப்பு உள்ளது அதே நேரத்தில் வட மாநிலங்களில் மிகவும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. தற்போது 80 தொகுதிகள் உள்ள உத்தர பிரதேசம் மறுவரையறை எனும் மறுசீரமைப்புக்குப் பின்பு 63 தொகுதிகள் கூடுதலாக பெற்று 143 தொகுதியாகும். 40 தொகுதிகள் உள்ள பீகார் மாநிலத்தில், மறுசீரமைப்புக்கு பின்னர் கூடுதலாக 39 தொகுதிகள் பெற்று 79 என உயரும் நிலை உண்டாகும். தற்போது தமிழ்நாட்டில் 39 தொகுதிகள் உள்ளன. மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்த பின்னர், எட்டு தொகுதிகள் குறைந்து 31 ஆகிவிடும். இதே போல தென்மாநிலங்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. ஆகவே, நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்புப் பாதிப்பு குறித்து, முதல்வர் தளபதி அவர்கள், கடந்த ஜனவரி திங்களில் இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதினார்.

கடந்த மார்ச்சு 5ஆம் நாள் 58 கட்சிகள் கலந்து கொண்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அனைவரின் கருத்தைக் கேட்டறிந்ததுடன், கருத்தொற்றுமை ஏற்படுத்தினார். அக்கூட்டத்தில், தென் மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டு நடவடிக்கைக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றினார். அத்துடன், எம்.பி. தொகுதிகள் குறைவால் பாதிக்கப்படும் ஏழு மாநிலங்கள், 29 கட்சிகளுக்கு மாண்புமிகு முதல்வர் கடிதம் எழுதி நிலைமையை விளக்கியுள்ளார். தற்போது தமிழ்நாட்டைப்போல பாதிக்கப் படும் மாநிலங்கள் ஒரிசா, தெலுங்கானா, கர்நாடகம், கேரளா, பஞ்சாப் உள்ளிட்ட மாநில முதல்வர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்துக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டு நடவடிக்கை குழு ஏற்பாடு செய்து வருகிறது.

மக்களாட்சி தான்! ஆனால்… ஓர் இட்லர் இந்தியாவை ஆள்கிறார்! தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கரங்களை வலுப்படுத்துவோம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்! உறவுக்குக் கை கொடுப்போம்!